# நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரமும் 19வது திருத்தச்சட்டமும்.

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B )

1977ம் ஆண்டு ஜூலை மாதம் 21ந் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் 2/3 பெரும்பான்மையிலும் கூடுதலாக 4/5 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றி ஈட்டியது. அப்போது 168 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றில் அவர்கள் பெற்ற உறுப்பினர்களின் தொகை 140 ஆகும். இரண்டாவதாக கூடிய உறுப்பினர்களைக் கொண்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணி 18 பேர்களைக் கொண்டு இருந்தது. சுதந்திரக்கட்சி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் எட்டே எட்டு தொகுதிகளில் மாத்திரம் வெற்றி பெற்றிருந்தது. எதிர்க்கட்சி தலைவராக தழிழர் விடுதலைக் கூட்டணியின் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தெரிவாகியிருந்தார்.

**1978ம் ஆண்டைய நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பு**

அரசியலமைப்பை திருத்துவதற்கோ அல்லது புதிதாக உருவாக்குவதற்கோ தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் மேலாக 4/5 உறுப்பினர்களை ஐ.தே.கட்சி கொண்டிருந்தமையினால் நாட்டை துரித அபிவிருத்திக்கு இட்டுச்செல்லும் நல்ல நோக்கில் புதிய அரசியலமைப்பொன்றை தயாரிக்க முற்பட்டார்கள். 1978ம் ஆண்டு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி இலங்கையை ஒரு ஜனநாயக சோசலிச குடியரசு என அறிவித்தது.

இந்த அரசியலமைப்பின் உறுப்புரை 30 தில் 30 (1) இலங்கை குடியரசுக்கு சனாதிபதி ஓருவர் இருத்தல் வேண்டும் : அவரே அரசின் தலைவரும் ஆட்சித்தறையினதும் அரசாங்கத்தினதும் தலைவரும், ஆயுதம் தாங்கிய படைகளின் படைத் தலைவருமாவார் எனவும் 30 (2) குடியரசின் சனாதிபதி மக்களினால் தேரந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் ஆறாண்டுகள் கொண்டதொரு தவணைக்கு பதவி வகித்தலும் வேண்டும் எனக் கூறுகின்றது.

உறுப்புரை 33 சனாதிபதியின் தத்துவங்கள் பற்றியும் பணிகள் பற்றியும் கூறுகின்றது. அவற்றில் பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தின் போது அரச கொள்கை கூற்றை வாசிப்பதும்: சடங்கு முறையான நடைமுறைகளுக்குத் தலைமை தாங்குவதும்: அரச தூதுவர்கள் உயர் ஆணையாளர்கள் அரசுப் பிரதிநிதிகள் ஏனைய இராஜ தந்திர முகவர்கள் என்போரை ஏற்று அங்கீகரித்தலுக்கும் அவர்களை நியமித்து பொறுப்பளித்தலுக்கும் மேலும் குடியரசின் பொது இலச்சினையை காப்பில் வைத்திருப்பதுடன் பிரதம அமைச்சரினதும் அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களினதும் பிரதம நீதியரசர் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினதும் நியமனப் பத்திரங்கள் குடியரசுக்கு உரித்தாக்கப் பட்டுள்ளனவும் வழங்கும் படியும் கையளிக்கும் படியும் மற்றும் காணி வழங்கல்கள் காணி கையளிப்புக்கள் ஆகியவற்றை பொது இலச்சினையின் கீழ் வழங்கல் செய்வதற்கும் உரிய பணிகளை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

உறுப்புரை 43 (2)ன் கீழ் சனாதிபதி அமைச்சரவையின் ஓர் உறுப்பினராகவும்

அதன் தலைவராகவும் இருத்தல் வேண்டும் என்கின்றது.
அத்தோடு 43 (3)ன் படி சனாதிபதி அவரது கருத்துப்படி பாராளுமன்றத்தின் எந்த உறுப்பினர் அதன் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவராக இருக்கிறாரோ அந்த உறுப்பினரை பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும் என்கின்றது.

உறுப்புரை 44ன் படி சனாதிபதி காலத்துக்கு காலம் தேவைப்படின் பிரதம அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரவையின் அமைச்சர்களினது எண்ணிக்கைப்பற்றியும் அமைச்சர்களுக்கு குறித்தொதுக்கப்படும் விடயங்கள் பணிகள் பற்றியும் தீர்மானிக்கவும் அதற்கு பொறுப்பான அமைச்சர்களை நியமிக்கவும் அதிகாரமுண்டு.

உறுப்புரை 47ன்படி பிரதம அமைச்சர் அல்லது ஒரு அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் கீழ் காணும் மூன்றில் ஒரு முறையில் பதவியினின்றும் விலகினாலொழிய தொடர்ந்தும் அமைச்சரவையில் பதவி வகித்தல் வேண்டும் எனக் கூறுகிறது.

(அ) சனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் பதவியினின்றும் அகற்றப் பட்டிருந்தால்

(ஆ) சனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு தம் கைப்பட எழுதி பதவியை துறந்தால்

(இ) பாராளுமன்ற உறுப்பினராக அவர் இல்லாதொழிந்தால்

உறுப்புரை 51ன் படி அமைச்சரவையின் செயலாளராக ஒருவரை சனாதிபதி நியமித்தல் பற்றி கூறுகின்றது.
உறுப்புரை 54ன்படி சகல பகிரங்க அலுவலர்களையும் சட்டத்துறை தலைமை அதிகாரிகளையும் படைகளின் தலைவர்களையும் சனாதிபதி நியமித்தல் வேண்டுமென கூறுகின்றது. மேலும் பகிரங்க சேவையில் ஐந்து ஆணைக் குழுவின் அங்கத்தவர்களை நியமிப்பதும் அதில் ஒருவரை தவிசாளராக நியமிக்கும் அதிகாரமும் உறுப்புரை 56 (1)ல் கூறப்பட்டுள்ளது.

உறுப்புரை 70ன் படி சனாதிபதி பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தை கூடுமாறு அழைக்கலாம் அமர்வை நிறுத்தலாம் அத்துடன் கலைக்கலாமென கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றம் 02ம் தடவையும் நிராகரித்திருந்தால் சனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்க அதிகாரமுண்டு. அந் நிலைமையில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தல் நடந்து ஓராண்டு காலம் முடிவடையும் வரை மீண்டும் கலைத்தலாகாது. அத்துடன் பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் மூலம் சனாதிபதியை கலைக்கும்படி வேண்டினால் கலைக்கலாம்.

உறுப்புரை 103ன் படி தேர்தல்கள் ஆணையாளர் ஒருவரை சனாதிபதி நியமித்தல் வேண்டும் என்கின்றது.
உறுப்புரை 107ன் படி சனாதிபதி பிரதம நீதியரசரையும் மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவரையும் மற்றும் இரு நீதிமன்றங்களின் எனைய நீதிபதிகளையும் அவரது கைப்பட எழுதப்பட்ட எழுத்தாணை மூலம் நியமிக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.
உறுப்புரை 111 (2)ன் படி சனாதிபதி மேல் நீதிமன்ற நீதிபதிகளை சனாதிபதி தனது கைப்பட எழுதப்பட்ட ஆணை மூலம் நியமிக்கப்படுதல் பற்றி கூறுகின்றது.

உறுப்புரை 112 (1)ன் படி நீதித்துறைச் சேவை ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கும் அவ் ஆணைக்குழுவுக்கு தவிசாளராக பிரதம நீதியரசரும் வேறு இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அங்கத்தவராகவும் சனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும் என்பது பற்றிக் கூறுகின்றது.
உறுப்புரை 153 (1) கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவரை சனாதிபதி நியமித்தல் பற்றி கூறுகின்றது.
உறுப்புரை 156 (2) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் ஒருவரை சனாதிபதி நியமித்தல் பற்றிக் கூறுகின்றது.

இங்கு கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் அரசாங்கத்தில் பதவி வகிக்கும் முக்கிய பதவியில் இருப்பவர்களையும் சுயாதீனமாக செயற்பட வேண்டியவர்களையும் சுயாதீனமாக செயற்பட வேண்டிய ஆணைக்குழுக்களையும் சனாதிபதியே தன்னிச்சைப்படி நியமிப்பதற்கு முழு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளதென்பதாகும்.

**அரசியலமைப்பின் 19வது திருத்தச்சட்டம்**

மேற்கூறப்பட்ட சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் சுயாதீனமாக செயற்படும் அதிகாரிகளையும் சுயாதீனமாக செயற்படும் ஆணைக் குழுக்களையும் வேறும் பல முக்கிய பதவிகளில் இருப்பவர்களையும் நியமித்தல் சார்பாக சனாதிபதிக்கு இருந்த நிறைவேற்று அதிகாரத்தை நீக்கி அந்நியமனங்களை 19வது திருத்தச் சட்டத்தினால் ஒரு அரசியல் அமைப்புப் பேரவைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

**அரசியலமைப்புப் பேரவை**

இந்த அரசியலமைப்புப் பேரவை பத்து அங்கத்தவர்களைக் கொண்டதாகும். அதில் பிரதம மந்திரியும் எதிர்க்கட்சித் தலைவரும் பாராளுமன்றச் சபாநாயகருமாக மூவர் அங்கத்தவர்களாக இருப்பார்கள். மேலும் ஒரு அங்கத்தவரை சனாதிபதி நியமிப்பார். இன்னுமொரு அங்கத்தவரை அரச கட்சி எதிர்க்கட்சியில் இல்லாத சிறு கட்சியில் ஒருவராக பாராளுமன்றத்தின் சிபாரிசின் மீது சனாதிபதி நியமிப்பார். ஏனைய ஐவரில் இரு அங்கத்தவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் ஏனையோர் வெளி ஆட்களாகவும் பிரதம அமைச்சரினாலும் எதிர்க்கட்சித் தலைவரினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படுவார்கள்.

இந்த அரசியலமைப்புப் பேரவை 05 வருடங்களுக்கு செயற்பாடுடையதாக இருக்கும் அத்துடன் சபாநாயகர் அதன் தவிசாளராக செயற்படுவார். இது 19வது திருத்தச்சட்டத்தில் உறுப்புரை 41ல் கூறப்பட்டுள்ளது.

இந்த அரசியலமைப்புப் பேரவை கீழ்காணும் ஆணைக்குழுக்களை நியமிக்க 19வது திருத்தச்சட்டம் வழிவகுக்கின்றது. தேர்தல்கள் ஆணைக்குழு: பகிரங்க சேவை ஆணைக்குழு: தேசிய பொலிசு ஆணைக்குழு: கணக்காய்வு சேவை ஆணைக்குழு: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு: நிதி ஆணைக்குழு: எல்லை நிர்ணய ஆணைக்குழு: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு: இலஞ்சம் ஊழல் பற்றிய சார்த்துரைகளை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு: தேசிய பெறுகை ஆணைக்குழு ஆகியவற்றுக்கான அங்கத்தவர்களை விதப்புரை செய்யும்.

இதை விடவும் கீழ் காணும் உயர் பதவிகள் வகிப்பவர்களையும் இந்த அரசியலமைப்புப் பேரவை நியமிக்க விதப்புரை செய்யும். பிரதம நீதியரசரையும் உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் நியமித்தல்: மேன் முறையீட்டு நீதிமன்றத் தலைவரையும் நீதிபதிகளையும் நியமித்தல்: நீதிச் சேவை அணைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தல்: சட்டத்துறை தலைமையதிபதயை நியமித்தல்: கணக்காய்வாளர் தலைமையதிபதியை நியமித்தல்: பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியை நியமித்தல்: பாராளுமன்ற நிர்வாக ஆணையாளரை நியமித்தல்: பாராளுமன்ற செயலாளர் நாயகத்தை நியமித்தல்:
ஆகிய பதவி வகிப்பவர்களின் நியமனத்தையும் இச்சபையின் விதப்புரையின் மீது அன்றி சனாதிபதியினால் நியமிக்கப்படல் ஆகாது என உறுப்புரை 41 ஆ (1) கூறுகிறது.

சனாதிபதியின் ஏகபோக அதிகாரத்திலிருந்து விலகி ஜனநாயக முறைப்படி நியமனங்கள் செய்யப்பட 19வது திருத்தச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது. இதனால் ஆணைக்குழுக்களும் குறித்த உயர்பதவி அதிகாரிகளும் தம் கடைமைகளை எவரது இடைஞ்சலுமின்றியும் நிர்ப்பந்தமின்றியும் சனநாயக ரீதியில் இயங்குவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனம் சார்பான அரசியலமைப்பின் 54 : 56 : 103 : 107 : 111 (2) : 112 (1) : 153 (1) : 156 ஆகிய உறுப்புரைகள் 19வது திருத்தச் சட்டத்தில் திருத்தப்பட்டுள்ளன.

உறுப்புரை 30 நீக்கப்பட்டு புதிய உறுப்புரையாக சனாதிபதியின் ஆறாண்டுக்கான பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக திருத்தப்பட்டுள்ளது.

உறுப்புரை 33 நீக்கப்பட்டு திருத்தப்பட்ட உறுப்புரையில் அரசியலமைப்பை மதித்து போற்றப்படுவதை உறுதிப்படுத்தல்: தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்தல்: சுயாதீனமான நிறுவனங்களின் முறையான செயற்பாட்டை உறுதிப் படுத்துதலும் வசதியளித்தலும்: மேலும் தேர்தல் ஆணைக்குழுவின் மதியுரையின் மீது சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களும் மக்கள் தீர்ப்பும் நடைபெறுவதற்கான உகந்த சூழல் உருவாக்கப்படுதலை உறுதி செய்தல் போன்ற புதிய கடமைகளையும் உள்ளடக்கியுள்ளது.

உறுப்புரை 33க்கு உடனடுத்து 33 அ எனும் புதிய உறுப்புரையை உட்புகுத்தி சனாதிபதி அரசியலமைப்பின் கீழும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பற்றிய சட்டம் உட்பட எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழும் தமது தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் உரிய முறையில் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றத்துக்கு பொறுப்பாதல் வேண்டும் என்று திருத்தப்பட்டுள்ளது.

உறுப்புரை 43 (2) சனாதிபதி பிரதம அமைச்சரின் மதியுரையின் மீது அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கு என பாராளுமன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை நியமித்தல் வேண்டும் என மாற்றப்பட்டுள்ளது.

உறுப்புரை 46 (1) (அ) அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கை முறப்பதை விஞ்சலாகாது என திருத்தப்படுகின்றது. இதன் (ஆ) அமைச்சரவை உறுப்பினர்களல்லாத

அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் கூட்டு மொத்த எண்ணிக்கை நாற்பதை விஞ்சலாகாது என்றும் திருத்தப்பட்டுள்ளது.

உறுப்புரை 46 (2) பிரதம அமைச்சரின் பதவி வெற்றாகும் சந்தர்ப்பங்களைக் கூறுகின்றது. இதன் (அ) சனாதிபதிக்கு முவரியிட்டனுப்பும் தம் கைப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியை துறத்தல். (ஆ) பாராளுமன்ற உறுப்பினரொருவராக இல்லாதொழிதல் ஆகிய சந்தர்ப்பங்கள் தவிர அமைச்சரவை தொடர்ந்து பணியாற்றும் காலம் முழுவதும் பிரதம அமைச்சராக தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும் என திருத்தப்பட்டுள்ளது.

உறுப்புரை 70ன் (1) பந்தியை நீக்கி அதற்குப் பதிலான பந்தியில் சனாதிபதி பிரகடனத்தின் மூலம் பாராளுமன்றத்தை கூடுமாறு அழைக்கலாம்: அமர்வு நிறுத்தலாம் அத்துடன் கலைக்கலாம். ஆயினும் பாராளுமன்றத்தின் முதற் கூட்டத்துக்கு நியமித்த திகதியிலிருந்து நான்கரை வருடங்கள் முடிவுறும் வரை கலைக்க முடியாதென்றும் ஆனால் பாராளுமன்றத்தின் மொத்த எண்ணிக்கையின் ( சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டுக்கு குறையாத உறுப்பினர்களின் வேண்டுதலாக தீர்மானித்தால் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் என திருத்தப்பட்டுள்ளது.